



















25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.canadauthayan.ca

UTHAYAN

உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1257 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 8, 2020
















## ● கனடாவில் ஒன்றாரியோவிலும் கியுபெக்கிலும் முதியோர் காப்பிடங்களில் தங்கியுள்ள வயதானவர்கள் மரணமடையும் எண்ணிக்கை அதிகரிப்பு


## ● உலகெங்கும் இறந்தவர்களின் எண்ணிக்கை 270410 ஆக உயர்ந்துள்ளது

## ● அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு: 79019

## ● நேற்றுவரை கொரோனா பலிகொண்ட உலக மக்களின் எண்ணிக்கை இவை தான்:

கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை மாலை வரை பலிகொண்ட உலக மக்களின் எண்ணிக்கை கீழே காணப்படுகின்றன. உலகெங்கிலுமான மொத்த இறப்புக்கள்: 270,410. சில நாடுகளில் கோரோனா இறப்புக்கள் பின்வருமாறு அமைகின்றன:-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமெரிக்கா: | 70010 | இத்தாலி: | 30150 | கனடா: | 4561 | இங்கிலாந்து: | 31067 | ஸ்பெயின்: | 26302 | ஜேர்மனி: | 7512 |
| சீனா: | 4633 | பிரான்ஸ்: | 26017 | ஈரான்: | 6517 | இந்தியா: | 2003 | இலங்கை: | 9 | பெல்ஜியம்: | 8032 |





# Canadian Armed Forces Helicopter Crash Victims Honoured at Special Military Ceremony at Trenton CFB

## கிறிஸ் நாட்டுக் கடலில் விபத்துக்குள்ளாகி மூழ்கிய கனடிய ஆயுதப் படை ஹெலிகெப்டரில் பயணித்த ஆறு படை வீரர்களிற்கு சிறப்பு இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது

கடந்த வாரம் ஆறு கனடிய படைவீரர்கள் நல்லெண்ணப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் பயணித்த ஹெலிகெப்டர் விபத்துக்குள்ளாகி கிறிஸ் நாட்டுக் கடலில் மூழ்கிய செய்தியை எமது வாசகர் அறிந்திருப்பார்கள். இது பற்றிய செய்தியை கடந்த வாரம் மிகுந்த துக்கத்துடன் நாம் பதிவு செய்திருந்தோம்.

மேற்படி விபத்தில கொல்லப்பட்ட ஆறு படை வீரகளுக்கும் நேற்று முன்தினம் புதன்கிழமை ரொன்ரோவிற்கு கிழக்கே 401 பெருந்தெருவிற்கு அருகில் உள்ள Trenton நகரில் அமைந்துள்ள கனடிய ஆயுதப்படையின் முகாமில் இராணுவ மரியாதை அளிக்கப்பட்டது. இந்த வைபவத்தில் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களும் பாதுகாப்பு அமைச்சர் ஹர்ஜித் சஜ்ஜான் அவர்களும் தமது அதிகாரிகள் சகிதம் கலந்து கொண்டு படைவீரர்களின் உறவினர்களோடு தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டனர்.



மேற்படி 6 படை வீரர்களில் ஒருவருடைய உடல் மட்டும் முழுமையாக அடையாளம் காணப்படும் வகையில் இருந்ததாகவும் ஏனைய இருவரது உடற்பகுதிகள் அடையாளம் காணப்படாத வகையில் இருந்ததாகவும் மிகுதி மூன்று படை வீரர்களின் உடல்கள் தேடுதல் நடத்தியும் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Trenton நகரில் இராணுவ மரியாதை அளிக்கப்பட்டதும், அவர்களது உடல்கள் மற்றும் உடற்கூறுகள் ஆகியன ரொரன்ரோ மாநகரில் உள்ள ஒன்றாரியோ தலைமை மரண விசாரண அதிகாரியின் அலுவலகத்திற்கு 401 பெருந்தெரு வழியாக எடுத்து வரப்பட்டு பின்னர் இறந்த படைவீரர்களின் உறவினர்கள் தங்கள் இடங்களுக்கு சென்றனர்.
























அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
416-757-0034
416-994-3861
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்




SKN
SKN FINANCIAL
www.sknfinancial.com
அரச
அங்கீகாரம்
பெற்ற
நிறுவனம்
கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்
முழுமையாக
காப்புறுதி
செய்யப்பட்டது
$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்
உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com
SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238
BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

## உதயன் கதிரோட்டம்

# மது தரும் போதையும் 'கொரோனா'வின் பரவலும்- இரண்டுமே பொது இடங்களில் தான் மோதுகின்றன

இரண்டு மாதங்களை எட்டிப்பிடிக்கப்போகின்றன, "கொரோனா"வின் கோரத்தாண்டவத்தை நாம் மரணத்தோடு இணைத்து பார்த்து அஞ்சி அஞ்சி வாழ்ந்த நாட்கள். மரணம் சில வேளைகளில் எம்மை அழைத்துச் சென்று விடும் என்பதற்காக அனைவருமே வீடுகளின் உள்ளே தங்கியிருக்கவில்லை. மக்கள் மட்டுமே மருத்துவ உலகத்தையும் ஆட்சியில் உள்ளவர்களையும் நம்பிய வண்ணம் இருந்தனர்.

ஆனால் . அரியாசனங்கள் ஆட்டம் எடுத்தன. அரசியல் தலைமைகள், மருத்துவத்துறையின் உயர் அமைப்புக்கள், விஞ்ஞானிகளின் அரங்குகள், வைத்தியசாலைகளின் பணியாற்றும் வைத்தியப் பெருந்தகைகள், தாதிகள் மற்றும், குழுக்களாக இணைந்து நின்று இரவு பகலாக, பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைக் காக்க எங்கள் உயிர்களை பணயம் வைக்கின்றோம் என்ற வைராக்கியமான வார்த்தைகள்..

இவ்வாறு தான் எமது கடந்து போன "கொடிதான" நாட்கள் எமக்குத் தெரிந்தன.

அரசாங்கங்களின் "கஜானா" களில் நிதி இருந்ததோ என்னவோ, தேச மக்களின் துயர் துடைக்க ஒவ்வொரு நாடும் தன்னால் இயன்றளவிற்கு உதவிகளை வழங்கி நின்றன. ஒவ்வொரு நாட்டு அமைச்சரவையிலும் மாநிலங்களின் அமைச்சரவையிலும் பணியாற்றிய சுகாதார அமைச்சர்கள் , அவர்களின் செயலாளர்கள், அதே போன்று, பொதுச் சுகாதார அமைப்புக்களின் அதிகாரிகள் என அனைவருமே நான்கு திசைகளிலிருந்தும் வரும் தகவல்களையும் பாதுகாப்பு உபகரணங்களையும் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு, இந்த "கொடிய நோயை" விரட்டி அடிக்கவும், தம் மக்களைக் காப்பாற்றவும் இதய சுத்தியோடு பணியாற்றினர்.

ஆனால் உலக மக்களில், இந்த கொடிய நோயினால் இறப்பு வரைக்கும் அழைத்துச் செல்லப்படடவர்களின் எண்ணிக்கை, மூன்று இலட்சத்தை எட்டிவிடுமோ என்ற ஏக்கம் அனைவரிடமே காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட அங்குள்ள மருத்துவ துறை சார்ந்த அறிவு ஆற்றல் எதுவுமே இந்த கொடிய நோயைக் கட்டுப்படுத்தும் வலிமை கொண்டதாக காணப்படவில்லை.

மற்றவர்களிடம் இருந்து விலகி இருத்தல், பாதுகாப்பு கவசங்களை அணிதல் பொது இடங்களில் ஐந்து பேருக்கு மேல் ஒன்றாக சந்திக்காமல் இருப்பதை உறுதி செய்தல், நோய்க்கான அறிகுறிகள் உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்படுதல் போன்ற அறிவுரைகள் சட்டமாக்கப்பட்டு இருந்தாலும் சில நாடுகளில் மேற்கூறிய விடயங்கள் சரியான முறையில் பேணப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணம் இருந்தன. இவ்வாறான குறைபாடுகள் அதிகளவில் காணப்பட்டும், அதனால் காவல்துறையினரின் கண்டிப்புக்கும் தாக்குதலுக்கும் ஆளானர்கள் அதிகமாகக் காணப்பட்ட இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் அதிஸ்டவசமாக இறப்புக்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தன.

இவ்வாறிருக்க, இந்த நம்பிக்கைகள் அனைத்தையுமே உடைத்தெறியும் வகையில் மதுபானக் கடைகளிள் கதவுகள் திறக்கப்பட்டதும் அதனால் மதுப்பிரியர்கள் உள்ளே சென்று வாங்கி வந்த பானம் "உள்ளே" சென்றதும் முன்னர் இருந்த கட்டுப்பாடுகள் அனைத்துமே தகர்த்தெறியப்பட்டதாக எமக்குத் தோன்றின.

உலகின் பல நாடுகளில் மதுப்பிரியர் அதிகமாக இருந்தாலும் தமிழ் நாட்டில் மரண பயத்தையும் மறந்து விட்டு, மதுபானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இலட்சக் கணக்கானவர்கள் வீதிகளில் முண்டியடிக்கும் காட்சிகளை தமிழக தொலைக் காட்சிகளே தெளிவாகக் காட்டி நிறிகின்றன

ஊரடங்கு காரணமாக, மார்ச், 25 முதல், தமிழகத்தில் மதுக் கடைகள் மூடப்பட்டன. மத்திய அரசு, கொரோனாக் கிருமிகள் பாதிப்பு இல்லாத பகுதிகளில், ஊரடங்கை தளர்த்த அனுமதி வழங்கியது. இதையடுத்து தமிழகத்தில், சென்னை உட்பட, வைரஸ் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகள் தவிர்த்து, மற்ற மாவட்டங்களில், நேற்று மதுக் கடைகள் திறக்கப்பட்டன.

அனைத்து மதுபானக் கடைகளிலும் கூட்டம் அதிகம் இருந்தது. நேற்று ஒரே நாளில் மட்டும், 170 கோடி ரூபாய் மதிப்பிலான மது வகைகள் விற்பனையாகியுள்ளன என்ற "சாதனை" அறிவிப்பு கூட செய்திகளாகக் காற்றில் பறக்கின்றன.

ஆனாலும், இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து, இந்த பக்கத்திற்குரிய வரிகளை பதிவு செய்கின்ற எமது விரல்கள் எம்மிடம் கேட்கின்றன.

" எதற்காக இந்த அவசரம்? எம் வீட்டுக் கதவுகளையும் ஆடம்பரப் பொருட்கள் விற்கும் கடைகளின் கதவுகளையும் பூட்டும் படி அல்லவா கேட்டிருந்தீர்கள்? .அவ்வாறிருக்க, இந்த மதுக்கடைகளின் கதவுகளை மட்டும் யார் திறக்கச் சொன்னார்கள்? இந்த விடயத்திலும் அரசியல் இருக்கிறதா? சொல்லுங்கள்....

- **தமிழ்நாட்டில் மதுபானக் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டதால் திணறும் குடும்பத் தலைவிகளும் பெண் பிள்ளைகளும்...**
- **இத்தனை நூறு ஊடகங்கள் சத்தமிட்டுச் சொல்லியும்'காதுகள் அடைத்துப்' போயிருந்த தமிழக அரசும் அதன் அமைச்சர்களும்...**
- **கொரோனா மரணங்கள் அதிகரிக்கும் என்ற அச்சத்தில் வாயடைத்து நிற்கும் பொதுமக்கள்...**




இந்தியாவில் கொரோனா நோய் பரவல் காரணமாக ஒரு மாதத்திற்கு மேலாக மூடி வைக்கப்பட்டிருந்த அரசுக்கு சொந்தமான மதுபானக் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டதால் அமைதியாக இருந்த தமிழ் நாடு அல்லல் படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார் தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் அதிகளவு பணம் சம்பாதிக்கும் நடுத்தர மற்றும் மேற்தட்டு மக்கள் தாங்கள் விரும்பிய மதுபான வகைகளை பணம் கொடுத்து வாங்கி அருந்தும் நிலையிருக்க அடிமட்ட தொழிலாளர்கள் மற்றும் நாட்கூலி தொழிலாளர்கள் ஆகியோரும் தீவிர குடிப்பழக்கம் உள்ள ஏழை மக்களும் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதியை மதுவிற்கே செலவு செய்வதும் பின்னர்

போதை தலைக் கேறிய நிலையில் வீடுகளுக்குச் சென்று மனைவிமாரோடும் வீட்டில் உள்ள பெண் பிள்ளைகளோடும் சண்டை பிடித்து அவர்களுக்கு மேலும் துன்பத்தை தரும் விடயங்கள் தினமும் நடக்கும் ஒன்றாகவே காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் கொரோனா நோய் காரணமாக மதுபானக் கடைகள் மூடியதை வரவேற்ற குடும்பப் பெண்கள், தங்கள் கணவர்கள் சம்பாதித்துத் தராவிட்டாலும் குடிப்பழக்கத்தை கைவிட்டார்கள் என்ற திருப்தியோடு இருந்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்தற்கு மாறாக, எது நடக்கக் கூடாது என்று நினைத்தார்களோ அது தற்போது நடந்து விட்டது என்று அவர்கள் தலையில் அடித்துக் கொள்ளும் அளவிற்கு பிரச்சனைகள் அதிகமாகவிட்டன. மதுபானக் கடைகளில் முன்பாக நீண்ட தூர வரிசையில் காத்திருந்து கடன்பெற்றுச் சென்ற பணத்தைக் கொடுத்து மதுவை வாங்கி உற்சாகத்துடன் அருந்திவிட்டு 'கலாட்டா' செய்யும் அக்கிரமம் மீண்டும் தொடங்கிவிட்டதாக மக்கள் கவலையுடன் உணரத் தொடங்கியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் மதுரைக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றில் தனது கணவர் மது அருந்தி விட்டு வந்ததால் அதிர்ச்சியடைந்த மனைவி, தன் மகளுடன் சேர்ந்து தீக்குளித்தார்.. இந்த சம்பவம் மதுரையை உறைய வைத்து வருகிறது. ஊரடங்கினால் மதுக்கடைகள் மூடப்பட்டன.. இதனால் குடிப்பழக்கம் உள்ளவர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகினர்...

இந்நிலையில் திடீரென தமிழக அரசு மதுக்கடைகளை திறப்பதாக அறிவித்தது.. இதற்கு பல தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியது.. மூடிய கடைகள் மூடியபடியே இருக்கட்டும் என்று வலியுறுத்தப்பட்டது.. மது அருந்தினால் குடும்பங்களில் வன்முறை பெருகும் என்று நேற்றுகூட அன்புமணி ராமதாஸ் அறிக்கை வெளியிட்டிருந்தார். போலீஸ் பாதுகாப்பு எனினும் போலீஸ் பாதுகாப்புடன் நேற்று மதுக்கடைகள் திறக்கப்பட்டன.. மதுரையிலும் மதுப்பிரியர்கள் வரிசையில் நின்று மது வாங்கி சென்றனர்..

இந்நிலையில் மதுரை அலங்கா நல்லூரை சேர்ந்தவர் சிவக்குமார்.. இவரது மனைவி பரமேஸ்வரி.. இவருக்கு 38 வயதாகிறது.. இவர்களுக்கு 18 வயதில் அர்ச்சனா என்ற மகள் உள்ளார். சிவகுமாருக்கு மதுப்பழக்கம் உண்டு.. நேற்று முதல்நாள் கடை திறந்தவுடனேயே சிவக்குமார் மது வாங்கி அருந்தியுள்ளார்.. இதனால் அதிர்ச்சி அடைந்த பரமேஸ்வரியும், அர்ச்சனாவும் சிவகுமாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.. மகளுக்கு அப்பா மது அருந்தியதை ஜீரணிக்கவே முடியவில்லை.. வீட்டில் வாக்குவாதம் முற்றியது.. தந்தையை அர்ச்சனா கண்டித்தவாறே இருந்துள்ளார்.. அதற்கு சிவகுமார் மகளை கடுமையாக திட்டி உள்ளார். இதனால் மனைவி பரமேஸ்வரி மனமுடைந்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொண்டார்.. அப்போது பரமேஸ்வரி அலறியதை கேட்ட அக்கம்பக்கத்தினர் விரைந்து வந்து அவரை மீட்டு உட்கார வைத்தனர்..

அதற்குள் அர்ச்சனாவும் வீட்டிற்கள் சென்று உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்து கொண்டார்.. மகள் தீயில் வெந்து கதறுவதை கண்ட பரமேஸ்வரி விரைந்து சென்று அவரை காப்பாற்ற முயன்றார். ஆனால், அவருக்கும் உடம்பெல்லாம் தீ பரவ இருவருமே தீயில் அலறி துடித்தனர். பின்னர் தாய் - இகள் இருவரையும் அந்த பகுதி மக்கள் மீட்டு மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்..அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது..

இது இவ்வாறிருக்க, இவ்வளவு நாட்களும் ஒரு 'அமைதிப் பூங்கா" வாகக் காட்சியளித்த தமிழகம் மீண்டும் மதுகடைகள் திறந்ததால் அமைதி குலைந்து கொரோனா நோய் பரவல் மீண்டும் பல மடங்கு அதிகரிக்கும் என்ற அச்சத்தோடும் அவமானத்தோடும் தங்கள் இன்றைய நாளை கழிப்பதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

எமது செய்தியாளர் மேலும் அறிவித்துள்ளதில் பல அரசியல்வாதிகளுக்கு சொந்தமான மதுபான உற்பத்தி நிறுவனங்கள் விற்பனை இல்லாமல் அவர்களின் வருமானம் பாதிக்கப்பட்ட நிலையில் அரசியல் வாதிகளின் நெருக்குவாரம் காரணமாகவே இந்த மது பானக் கடைகளை மீண்டும் திறப்பதற்கு தமிழக அரசு முடிவெடுத்திருக்கும் என்று பலர் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும்,
திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

ARI A. ARIARAN CPA, CGA
Chartered Professional Accountant

# கனடா – முன்னாள் யாழ்ப்பாண மருத்துவ பீட பட்டதாரிகளின் அமைப்பு, தாயக மக்களுக்கு வழங்கிய உணவுப் பொருட்கள்

கனடாவில் இயங்கும் முன்னாள் யாழ்ப்பாண மருத்துவ பீட பட்டதாரிகளின் அமைப்பு இங்கு பல ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிவருகின்றது. இந்த அமைப்பில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் கற்று மருத்துவர்களாக வெளியேறியவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். இந்த மருத்துவர்கள் அனைவரும் கனடாவில் பல நகரங்களில் பணியாற்றுகின்றார்கள்.

இந்த அமைப்பு தாயகத்திலும் கனடாவிலும் இயங்கும் பல வைத்தியசாலைகள் மற்றும் சேவை அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் பல வழிகளில் தங்கள் ஆதரவை வழங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது.

தற்போது கொரோனா நோயின் கொடுமையினால் பல்வேறு வகையில் துன்பத்தை அனுபவிக்கும் தாயக மக்களில் ஒரு பகுதியினருக்கு அரிசி மற்றும் உணவு வகைகளை இந்த நிறுவனம் அண்மையில் வழங்கியது. யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்த அமைப்பின் தாய்ச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மூலம் வழங்கப்பெற்ற உணவுப் பொருட்கள் விநியோகத்திற்கு தயாராக இருப்பதை இங்கேயுள்ள படங்களில் காணலாம். (படங்கள்: யாழ் மைந்தன்)





# சுவிற்சலாந்து தேசத்தில் இயங்கும் 'கல்லாறு சதீஸ் கொடையகம்' தாயக மக்கள் துயர் துடைக்க வழங்கிய 8 இலட்சத்து 25 ஆயிரம் இலங்கை ரூபாய்கள்




சுவிற்சலாந்து தேசத்தில் வாழும் எழுத்தாளரும், பேச்சாளரும் அங்கு நிதிதுறை சார்ந்த நிறுவனம் ஒன்றை சொந்தமாக இயக்கி வருபவருமான கல்லாறு சதீஸ் அவர்கள் அங்கு மனித

நேய உதவிகள் வழங்கும் அமைப்பு ஒன்றையும் ஆரம்பித்து நடத்தி வருகின்றார்.

அண்மையில் "கல்லாறு சதீஸ் கொடையகம்" தாயக மக்கள் துயர் துடைக்கும் வகையில் இந்த "கொரோனா" காலத்தில் பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் குடும்பங்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவர்களிற்கு,

8 இலட்சத்து 25 ஆயிரம் இலங்கை ரூபாய்களை அனுப்பி வைத்துள்ளார். இந்தத் தொகையானது அங்குள்ள சில நண்பர்கள் மூலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்படும் படத்தில் 2015ம் ஆண்டு கனடா உதயன் நிறுவனம் நடத்திய "சர்வதேச விருது விழா"வில் ஐரோப்பாவிற்கானகலை இலக்கிய மேன்மை விருது" என்னும் உயர் கௌரவம் அவருக்கு வழங்கப்பெற்றபோது கனடாவில் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ராதிகா சிற்சபைஈசன் அவர்கள் விருதினை வழங்குவதைக் காணலாம்.

கல்லாறு சதீஸ் அவர்களின் மனித நேயப் பண்பை கனடா உதயன் நிறுவனம் பாராட்டுகின்றது.



# கனடா Toronto Voice of Humanity அமைப்பின் ஏற்பாட்டில் மலைநாட்டு தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள்








கனடாவில் பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி வரும் **Toronto Voice of Humanity** என்னும் மனித நேய அமைப்பின் ஏற்பாட்டில் மலைநாட்டு இலங்கையின் மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பெற்றன.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்கள் தற்போதைய அசாதாரண நிலையினால் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த விடயத்தை வத்தேகம என்னும் இடத்தைச் சேர்ந்த பாஸ்டர் ஏ. கே. ஸ்டீபன் அவர்கள் ஸ்காபுறோவில் உள்ள பாஸ்டர் எஸ். ஜே. சோதி அவர்களோடு தொடர்பு கொண்டு, வறுமையில் வாடும் தொழிலாளர்கள் குடும்பங்கள் சிலவற்றுக்காவது உடனடியாக உதவிகள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்.

தொடர்ந்து **Toronto Voice of Humanity** மனித நேய அமைப்பின் அங்கத்தவர்களான திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி, பாஸ்டர் சோதி ஆகியோர் இணைந்து தேவையான நிதியை அனுப்பி வைத்தனர்.
வத்தேகம பகுதியில் உள்ள அலக்கொல கிராம எழுச்சி தோட்டத்திலும், உடுகொட தேயிலை பெருந்தோட்டத்திலும்,வத்தேகம, எல்கடுவ தோட்டத்திலும் வாழும் தொழிலாளர் குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பெற்றன இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும். (படங்கள்: வடிவேல்)

# கொரோனா தொற்று நோயின் பாதிப்பால் இலங்கையின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது

**- கனடாவிலிருந்து நக்கீரன்**



கொரோனா தொற்று நோய் உலகத்தை முடக்கிப் போட்டுள்ளது. சீனாவில் உள்ள வுகான் மாகாணத்தில் கடந்த ஆண்டு இறுதியில் தொடங்கிய இந்தத் தொற்று நோய் இன்று 212 நாடுகளுக்குப் பரவியுள்ளது. இந்தப் புதிய தொற்று நோய்க்கு உலக சுகாதார நிறுவனம் "கொவிட்-19" **(Covid-19)** என்று பெயரிட்டுள்ளது.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது (மே 06) இந்த நோயினால் உலகம் முழுதும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3,806, 474 ஆக உயர்ந்துள்ளது. பலியானவர்கள் எண்ணிக்கை 263,478 ஆக உயர்ந்துள்ளது. படை பலம், பண பலம், பொருளாதார பலம் எனப் பல துறைகளில் கொடி கட்டிப் பறக்கும் அமெரிக்க வல்லரசு கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையிலும் முதல் இடத்தில் இருக்கிறது. கொரோனா புள்ளிவிபர வெளீயீட்டின்படி அமெரிக்காவில் மே 06 அன்று 2528 பேர் உயிரிழந்துள்ளனர். சராசரி உயிரிழப்புக்கள் 2,400 ஆக இருந்து வருகிறது. மேலும் இறப்பவர்களில் 52 விழுக்காட்டினர் கறுப்பின மக்கள் எனத் தெரியவருகிறது. அமெரிக்காவில் கறுப்பு இனமக்கள் மொத்தக் குடித் தொகையில் 13 விழுக்காட்டினர் ஆவர்.

**அட்டவணை 01**
**தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நாடுகள்**

| *நாடு* | *நோயாளர்* | *இறப்பு* | *கண்டம்* |
|---|---|---|---|
| அமெரிக்கா | 1,256,161 | 74,807 | வட அமெரிக்கா |
| இசுபானியா | 253,682 | 25,857 | ஐரோப்பா |
| இத்தாலி | 214,457 | 29,684 | ஐரோப்பா |
| ஐக்கிய இராச்சியம் | 201,101 | 30,076 | ஐரோப்பா |
| பிரான்ஸ் | 174,191 | 25,809 | ஐரோப்பா |
| ஜெர்மனி | 167,817 | 7,275 | ஐரோப்பா |
| உருசியா | 165,929 | 1,537 | கிழக்கு ஐரோப்பா - வட ஆசியா |
| கனடா | 63,403 | 4,223 | வட அமெரிக்கா |
| இந்தியா | 52,987 | 1,785 | ஆசியா |
| சிறிலங்கா | 897 | 9 | ஆசியா |

இந்தப் புள்ளி விபரத்தைப் நீங்கள் படிக்கும் போது பாதிக்கப்பட்டவர் மற்றும் இறந்தவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும். இந்தத் தொற்று நோய் உலகத்தை முடக்கிப் போட்டுள்ளது தெரிந்ததே. குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் வரலாறு காணத பாதிப்புக்கு உள்ளாக்கப் படப்போகின்றன.

விஸ்வரூபம் எடுத்துள்ள இந்த வேதாளத்தை எப்போது போத்திலில் அடைக்கலாம்? இந்தக் கேள்விக்கு துல்லியமான பதிலில்லை. ஒன்று இந்தக் கொரோனா கிருமி கண்ணுக்குத் தெரியாத எதிரி. குணப்படுத்துவதற்கு மருந்தும் இன்னும் கண்டு பிடிக்கப் படவில்லை. இந்த ஆண்டுக் கடைசியில் மருந்து கண்டு பிடிக்கப்படும் என அமெரிக்க சனாதிபதி ட்ரம்பு சொல்கிறார். அதற்கிடையில் கொரோனா மனிதர்களை ஒரு கை பார்த்துவிடும். மனிதர்களை மட்டுமல்ல நாடுகளின் பொருளாதாரத்தையும் உண்டு இல்லை என்றாக்கிவிடும்! குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் வரலாறு காணத பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கப் போகின்றன!

கொரோனா தொற்று நோயினால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 66 நாடுகளில் இலங்கை 61 ஆவது இடத்தில் இருக்கிறது. அதாவது அங்கோலா, லெபனன், ப∴ரேன், சம்பியா மற்றும் வெனிசூலா ஆகிய நாடுகளே சிறிலங்காவுக்குப் பின்னால் அணிவகுத்து நிற்கும் நாடுகள் ஆகும்.

கொரோனா தொற்று நோய் வரும் முன்னரே இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடந்தது. இப்போது மரத்தில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த மாதிரி இலங்கையின் பொருளாதாரம் மோசமான வீழ்ச்சி கண்டுள்ளது. பல காரணிகள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அல்லது வீழ்ச்சியைத் தீர்மானிக்கின்றன.

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி விழுக்காடு, வர்த்தகப் பற்றாக்குறை **(trade deficit)**, நாணய மாற்று விழுக்காடு (உரூபா ∴ அமெரிக்க டொலர்) வீழ்ச்சி கண்டுள்ளது. மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் சுமையால் நாடு மூழ்க்கிக் கொண்டிருக்கிறது.

வர்த்தக பற்றாக்குறை:

வர்த்தக பற்றாக்குறை என்பது ஒரு முக்கியமான காரணியாகும், இது பரிமாற்ற வீதம் மற்றும் கடன்கள் போன்ற பல பொருளாதார குறியீடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணிகளில் ஒன்று அதிகரித்து வரும் வர்த்தக பற்றாக்குறை (டி.டி) ஆகும். அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, கடந்த ஆறு ஆண்டுகளில் டிடி தொடர்ந்து 7,609 மில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 10,343 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்து வருகிறது. (அட்டவணை 2 ஐப் பார்க்கவும்)

**ஏற்றுமதி, இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை**
**அட்டவணை 2**

| *ஆண்டு* | *2013* | *2014* | *2015* | *2016* | *2017* | *2018* |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி | 10,394 | 11,130 | 10,546 | 10310 | 11360 | 11890 |
| இறக்குமதி | 18,003 | 19,417 | 18,935 | 19183 | 20980 | 22233 |
| பற்றாக்குறை | 7,609 | 8,287 | 8,389 | 8873 | 9620 | 10343 |

ஏற்றுமதி இறக்குமதி அமெரிக்க டொலர்

ஏற்றுமதி இறக்குமதியில் தொடர்ந்து பற்றாக்குறை ஏற்படுவது நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். அது மட்டுமல்ல மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் மோசமாக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். இது கடன்பட்டு கல்யாணம் செய்தவன் கதை போன்றது.

இந்த இருண்ட பின்னணியில் நல்லகாலமாக எரிபொருளின் விலை உலகச் சந்தையில் குறைந்துள்ளது. 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் எப்போதும் இல்லாத அளவு கச்சா எண்ணெய் விலை தற்போது கடும் சரிவைச் சந்தித்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் ஒரு பீப்பா கச்சா எண்ணெய் அ.டொலர் 160 க்கு விற்கப்பட்டது. இன்று அதே ஒரு பீப்பா கச்சா எண்ணெய் அ.டொலர் 24 ஆகக் குறைந்துள்ளது. இதனால் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளான சவுதி அரேபியா, குவேத், இரான், இராக், உருசியா, மெக்சிக்கோ, கனடா போன்ற நாடுகளின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை சந்திக்க இருக்கின்றன.

பல காரணிகள் ஒரு நாட்டின் பொருளாதார உறுதித்தன்மையை தீர்மானிக்கின்றன. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விழுக்காடு, வர்த்தகப் பற்றாக்குறை (வசயனந னநகைஉவை), நாணய மாற்று விழுக்காடு (உரூபா ∴ அமெரிக்க டொலர்) வீழ்ச்சி கண்டுள்ளது. மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் சுமையால் நாடு மூழ்க்கிக் கொண்டிருக்கிறது.

இந்த இருண்ட பின்னணியில் நல்லகாலமாக எரிபொருளின் விலை உலகச் சந்தையில் வரலாறு காணாத அளவில் குறைந்துள்ளது. 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் எப்போதும் இல்லாத அளவு கச்சா எண்ணெய் விலை தற்போது கடும் சரிவைச் சந்தித்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் ஒரு பீப்பா கச்சா எண்ணெய் அ.டொலர் 160 க்கு விற்கப்பட்டது. இன்று அதே கச்சா எண்ணெய் அ.டொலர் 24 ஆகக் குறைந்துள்ளது. இதனால், ஏற்கனவே கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக எரிபொருள், டீசல் தேவை குறைந்து வரும் நிலையில், சந்தையில் அந்த நெருக்கடியைச் சமாளிக்க உற்பத்தியை அதிகரித்து வர்த்தகத்தைக் கைப்பற்றச் சவுதி திட்டமிட்டுள்ளது.

இலங்கைத் தீவு முழுவதும் ஊரடங்கு உத்தரவின் விளைவாக பொருளாதாரம் மோசமடைந்துள்ளது. கொரோனா தொற்றுநோயின் விளைவுகள் காரணமாக வரும் மாதங்களில் தெற்காசியா நாடுகள் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியை சந்திக்க உள்ளன. இது குறித்து உலக வங்கி தனது இரு ஆண்டு வசந்த 2020 வெளியீட்டில் எச்சரித்துள்ளது. முச்சக்கர வண்டி மற்றும் பஸ் ஓட்டுநர்கள், தினசரி கூலி சம்பாதிப்பவர்கள் மற்றும் ளுஆநு களில் ஈடுபடுபவர்கள் போன்ற ஆயிரக்கணக்கான மக்கள் வேலை அல்லது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர், ஊரடங்கு உத்தரவு அவர்களின் நடவடிக்கைகளை குறைத்துள்ளதால் அவர்களுக்கு எந்த வருமானமும் கிடைக்க வழியில்லாது இருக்கிறது. இது இலங்கையின் பொருளாதாரம் மோசமான நிலையில் இருந்து படுமோசமான நிலைக்குச் சென்றுள்ளது.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தை புதுப்பிக்க அரசாங்கம் பொருத்தமான யதார்த்தமான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

Zero Risk

ELEGANT 16

2 BR and 3 BR

Prices starting from Rs. 35 Million




50 M from The British School in Colombo and 650 M from D.S. Senanayaka College.
In Close Proximity to Several Top Schools.
In Close Proximity Many Hospitals including the National Hospital.

Apartments are ready for occupation
COC and CMA Obtained
*Deed transfer can be done*
Few apartments available

Design by: VJ-Colombo

Elegant 16 is an Exclusive Apartment Complex with Only 17 Apartments

PLEASE CALL / WHAT'S APP +94 775255101 E-mail: priyan@ekromarealtors.com

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

416.298.FOOT (3668)

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

**Ontario**

# மலேசிய மடல்: வெளிநாட்டுத் தொழிலாளர்களால் சலசலப்பு

மலேசியாவில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக வெளிநாட்டுத் தொழிலாளர்-களால் பலவகையாலும் சலசலப்பு எழுந்துள்ளது. இதற்கு இடையில் நூ ற்றுக்கணக்கானோரை கைதுசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்தோனேசியா, வங்காள தேசம், மியன்மார், நேப்பாளம், பிலிப்பைன்ஸ், வியட்னாம், இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஏறக்குறைய 25 இலட்சம் என்ற அளவில் இருக்கின்றனர். தீபகற்ப மலேசியா, சபா மற்றும் சரவாக் ஆகிய பெரு மாநிலங்களில் இந்தத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

ஆனாலும், இவர்களில் பல இலட்சம் தொழிலாளர்கள் சட்டப்பூர்வ அனுமதியோ அல்லது முறையான ஆவணங்களோ இன்றி இருக்கின்றனர். இவர்களை, கள்ளக் குடியேறிகள் என்று மலேசிய அரசு வகைப்படுத்தி உள்ளது.

இப்படிப்பட்ட, நிலையில் கடந்த பிப்ரவரி மாத பிற்பகுதியில் நாட்டில் உச்சபட்ச அரசியல் குழப்பமும் அதிரடித் திருப்பங்களும் நிலவ-ிய நேரத்தில் "சந்தடி சாக்கில் நுழைவதைப் போல", மியன்மார் நாட்டில் இருந்து ரொஹிங்க்யா முஸ்லிம் அகதிகளை ஏற்றி வந்த ஒரு பெரும்படகு, நாட்டின் வட புலத்தில் உள்ள லங்காவித் தீவுக் கடற்கரைக்கு கமுக்கமாக வந்ததை கடலோர காவற்படையினர் மடக்கினர். (இந்த லங்காவித் தீவு ஒரு நாடாளுமன்றத் தொகுதியாக விளங்குகிறது. இங்குதான் முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது).

அந்தப் பிரச்சினை அடங்கிய கொஞ்ச காலத்தில், இந்த நாட்டில் ஏற்கெனவே அகதிகளாக உள்ள ரொஹிங்க்யா அகதிகள் சார்பில், மலேசிய மக்களுக்கு எதிராக சமூக வளைத்தலங்களில் கருத்து பதிவிடப்பட்டது.

இதைக் கண்டு கொதித்தெழுந்த மலேசிய மக்கள், எதிர்வினை ஆற்றத் தொடங்கினர். நாளேடுகளைவிட சமூக வளைத்தளங்களில் இதன் தொடர்பில் வகைதொகையின்றி கருத்துக்கள் பதிவிடப்பட்டதும், ரொஹிங்க்யா அகதிகள் தரப்பில் மன்னிப்பும் வருத்தமும் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, இந்தச் சிக்கலை போ-லீஸ் கையாள ஆரம்பித்ததும் பிரச்சினை அடங்கிப்போனது.

அதற்குள் அடுத்தப் பிரச்சினை தலையெடுத்தது. மலேசியாவ-ில் உள்ள அந்நியத் தொழிலாளர்களில், பெரும்பகுதியினர் நாட்டின் மையப் பகுதியான சிலாங்கூர் மாநிலத்திலும் கூட்டரசுப் பிரதேசமான கோலாலம்பூரிலும்தான் வசிக்கின்றனர் - வேலை பார்க்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, கோலாலம்பூரில் புகழ்பெற்ற வர்த்தகப் பகுதியான "மஸ்ஜித் இந்தியா" வட்டாரத்தில் உள்ள இரு அடுக்ககங்களில் அதிகமான வெளி-நாட்டுத் தொழிலாளர்கள் இருக்கின்ற நிலையில், அந்த மக்கள்மீது கொரோனா கிருமி தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள முயன்றபொழுது, "கிணறு வெட்ட பூதம் எழுந்த" கதையாக பல்வேறு சிக்கல் எழுந்தன. பிரபலமான ஹனி.ஃபா பல்பொருள் அங்காடி, அஜுந்தா டெக்ஸ்டைல்ஸ், மெட்ராஸ் ஜுவல்லர்ஸ், பாம்பே ஜுவல்லர்ஸ், மீனா ஜுவல்லர்ஸ் உள்ளிட்ட வர்த்தக மையங்கள் நிறைந்த மஸ்ஜித் இந்தியா பகுதியில் உள்ள "மலேயன் மென்'ன்", "சிலாங்கூர் மென்'ன்" ஆகிய இரு அடுக்ககங்களும் பழைய கட்டிடத்தொகுப்புகளாகும். இதேப் பகுதியில் உள்ள ஒரு தமிழ்ப் பள்ளிவாசல்-தான் "மஸ்ஜித் இந்தியா" என்று மலாய் மொழியில் அழைக்கப்படுவதுடன், அதுவே இந்தப் பகுதியின் அடையாளமுமாகி விட்டது.

மேற்குறிப்பிட்ட இரு அடுக்ககங்களிலும் பெரும்பாலும் தமிழ்நாட்டு முஸ்லிம்-கள் தஞ்சமடைந்திருந்த ஒரு காலம் இருந்தது. இப்பொழுது, வங்காள தேசம், மியன்மார் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கும் இது அடைக்கல மையமாகிவிட்டது.

இந்தக் கட்டடத் தொகுப்புகளில்தான் காவல் துறையினர், குடிநுழைவுத் துறையினர், "ரேலா" என்னும் தன்னார்வப் படை-டயினர் ஆகியத் தரப்பினரின் ஒத்துழைப்போடு சுகாதாரத் துறை பணியாளர்கள் "கோவிட்-19" கிருமித் தொற்றுக்கான பரிசோதனை மேற்கொள்ள முயன்றபோது அதிகமானோருக்கு அந்தக் கிருமித் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனே இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு, மஸ்ஜித் வட்டாரமே சுற்றி வளைக்கப்பட்டு முள்வேலி இடப்பட்டு இரவு பகல-ாக பாதுகாக்கப் பட்டது. அங்கிருந்து ஒருவரும் வெளியேறவோ அல்லது உள்ளே நுழையவோ முடியாதபடி ஒரு வாரத்திற்கும் மேலாக பலத்த கட்டுக்காவலில் வைக்கப்-பட்டது.

இந்தச் சூழலிலும் அந்த இடத்திலிருந்து மியன்மார், வங்காள தேச நாடுகளைச் சேர்ந்த எழுவர் முள்கம்பி வேலிகளைச் சிதைத்து தப்பிவிட்டனர். கொரானோ கிருமி தொற்றியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த எழுவரையும் போலீஸ் தேடி வருவதுதான் தற்போதைய சூடான செய்தி.

இதற்கிடையில் ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாக பணிபுரியும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு தொழிலாளர்களை கைது செய்யும் நடவடிக்-கையில் மலேசிய காவல்துறை முனைப்பு காட்டத் தொடங்கியுள்ளது

கோவிட்-19 நோய்த்தொற்றை கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்-படுவதாக அரசத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், புலம்பெயர்ந்தோர் தங்கியுள்ள தடுப்பு முகாம்களில் இருந்து குழந்தைகள் மற்றும் நோய்த்தொற்றால் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களை விடுவிக்கு-மாறு ஐக்கிய நாடுகள் சபை மலேசிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.


நக்கீரன்

இதுக்குறித்து கருத்துத் தெரிவித்துள்ள "ஹியூமன் ரைட்ஸ் வாட்ச்" என்னும் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த பில் ராபர்ட்சன், "காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் அடைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்கள் மூலமாகவும் சட்டவிரோதமாக பணியாற்றி வரும் வெளிநாட்டு தொழிலாளர்-களின் ஒத்துழைப்பின்மையாலும் இதுபோன்ற நடவடிக்கைகள் மலேசியாவில் நோய்த்தொற்றுப் பரவலை அதிகரிக்க கூடும்" என்று ட்விட்டர் பதிவின்வழி எச்சரித்துள்ளார்.

மொத்தத்தில் கொரோனா கிருமியின் தாக்கம் தற்பொழுது கட்டுப்பாட்டில் இருக்கின்ற வேளையில், தேசிய அரசியல் மெல்ல சூடுபிடிக்கத் தொடங்கி உள்ளது.

மார்ச் முதல் தேதி பிரதமர் பொறுப்பை ஏற்ற டான்ஸ்ரீ முகைதின் யாசின், இன்னும் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை நிரூபிக்காமல் இருக்கிறார். மார்ச் 18-ஆம் நாள் மலேசிய நாடாளுமன்றம் கூட இருக்கின்ற நிலையில், வரும் நாட்களில் மலேசிய அரசியல் பரபரப்பும் ஆர்வமும் மிக்கதாக இருக்கக்கூடும்.

ஆண்ட நம்பிக்கைக் கூட்டணியில் இருந்து பிரிபூமி என்ற கட்சி விலகி, எதிர்க்கட்சியினருடன் சேர்ந்த ஆட்சி அமைத்திருப்பதை மலேசிய மக்கள் இரசிக்கவில்லை. அரசியல் நிலைத்தன்மைக்கு பெயர் பெற்ற மலேசியாவில் குதிரை பேர அரசியல்வாதிகளும் பதவி மோகம் கொண்டவர்களும் சேர்ந்து குந்தகம் புரிந்திருப்பது, மலேசிய அரசியல் நிலைத்தன்மையில் கேள்விக் குறியை எழுப்பியுள்ளது.

அடுத்த வாரம் சந்திப்போம்.
அன்பன் நக்கீரன்
கோலாலம்பூர். 6-05-2020


## SOUTH INDIAN FOOD CHEF

SARAVANAA BHAVAN is actively seeking for motivated South Indian Food Chefs to work at our restaurant.

**1571 Sandhurst Circle #153, Scarborough, ON, M1V 1V2**
**4559 Hurontario street # 12B, Mississauga, On, L4Z 3L9**

Title of Position: South Indian Food Chef (NOC 6321) Vacancies: 4

Type of Position: Permanent, full time,
Wage & Hours: $23.10 per hour, 40 hours per week,Overtime pay after 44 hours per week

Job Duties:
- Guide preparation of exquisite South Indian cuisine
- Prepare and cook complete South Indian cuisine meals on a daily basis
- Help other cooks in the kitchen by instructing cooks in preparation, cooking, garnishing and presentation of food
- Prepare special menu items
- Demonstrate excellent food preparation practices, portion control & end to end food production
- Preparing and catering meals for special events and receptions such as weddings and banquets
- Maintain a clean and sanitary workstation area including but not limited to tables, shelves, counters, grills, fryers, burners, ovens, flat top range and refrigeration equipment

Skills & Education Required:
- 1-2 years' experience in South Indian (Tamil) Cuisine
- Authentic South Indian cooking knowledge required
- Ability to work well with others
- Ability to work in a fast-paced environment
- Work under pressure
- No formal education required
- Minimal English required

Work Conditions and Physical Capabilities:
- Face-paced environment, tight deadlines, work under pressure, attention to detail, standing for extended periods

Benefits: Home leave and accommodations available

**www.saravanabhavan.ca**
**Email: info@saravanabhavan.ca**

# தமிழ்நாட்டில் மது உற்பத்தி சாலைகளையும் மூட வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் பழ நெடுமாறன் அவர்கள்

மேற்படி விடயம் தொடர்பாக தமிழ்த் தேசிய உணர்வாளரும், தமிழர் தேசிய முன்னணித் தலைவருமான திரு பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுவிலக்கை இரத்து செய்து மதுக்கடைகளைத் திறப்பதென தமிழக அரசு முடிவு செய்த நாளிலிருந்து தொடர்ந்து அதை எதிர்த்துப் போராடியவன் என்ற முறையில் சமுதாயச் சீரழிவிற்கு பெரும் காரணமான மதுக் கடைகளை மீண்டும் திறக்க தமிழக அரசு செய்துள்ள முடிவினை வன்மையாகக் கண்டிக்கிறேன். பல அரசியல் கட்சிகளும் சமூகத் தொண்டு அமைப்புகளும் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்த செய்துள்ள முடிவினை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

அதே வேளையில் தமிழ்நாட்டில் மது உற்பத்தி சாலைகள் 11, பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் 8 உள்ளன. இவற்றிலிருந்துதான் அரசின் மதுக் கடைகளுக்குத் தேவையான மது புட்டிகள் வாங்கப்படுகின்றன. இவற்றின் உரிமையாளர்களாக அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அல்லது அவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள் இருக்கிறார்கள். அரசியல் தலைவர்கள் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி மது தொழிற்சாலைகளை மூடும்படி வற்புறுத்த வேண்டும். மறுத்தால் அத்தகையவர்களை தங்கள் கட்சிகளிலிருந்து நீக்க வேண்டும்.

அதைப் போல தமிழ்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான மதுக்கடைகளில் உள்ள தனியாருக்கு சொந்தமான மதுக் கூடங்கள் (பார்) பெரும்பாலும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகின்றன. இத்தகையவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசியல் கட்சிகள் முன் வர வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

கொரோனா தொற்று பரவுவதற்கு கோயம்பேடு சந்தை முக்கிய காரணமாக இருந்ததால் அதை மூடியது போல மதுவினால் ஏற்படும் சமூகச் சீரழிவிற்கு காரணமான மது உற்பத்தி சாலைகளை மூடுவதற்கு அனைவரும் இணைந்துப் போராட முன் வர வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.



(பழ. நெடுமாறன்)
தலைவர்

# கனடாவில் இயங்கும் ஈகை அறக்கட்டளை அமைப்பு 17-01-2020 அன்று நடத்திய சந்திப்பு நிகழ்வு

கனடாவில் முன்னர் இயங்கிவந்த ரீவீஜ (வுஏஜ) நிறுவனத்தினரிடமிருந்து கிடைத்த நிதிப் பங்களிப்பினை அடிப்படையாக வைத்து உருவான ஈகை அறக்கட்டளை அமைப்பின் அங்குரார்ப்பணம் பற்றி கனடா வாழ் தமிழ் மக்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். கனடாவிலும் இலங்கையிலும் வாழும் எமது மக்களை ஒன்றிணைக்கவும் அவர்களுக்கு உதவுவதற்கும், சேவைசெய்வதற்குமென்ற நல்ல நோக்கத்தோடு தான் ஈகை அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. ஈகை பற்றிய விபரங்களை அறிய http://WWW.EEKAI.ORG என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

ஈகை அறக்கட்டளை தனது 21-07- 2019 அன்று நடைபெற்ற ஆரம்ப அறிவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, புது அறிவிப்புகள் மற்றும் சந்திப்பு நிகழ்வை 17-01-2020 வெள்ளிக்கிழமை, மார்க்கம் நகரில் அமைந்துள்ள J&J Banquet Hall மண்டபத்தில் நடத்தியது.

திருமதி. பவானி செல்வசிங்கத்தின் நெறியாள்கையில் சிறப்புற நடைபெற்ற இந்நிகழ்வில் இளைஞர் ,பெரியோர்கள் உட்பட்ட 35ற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். தேசியகீதம், தமிழ் வாழ்த்துடன் ஆரம்பித்த நிகழ்வில் ஈகை அறக்கட்டளையின் எதிர்காலச் செயல்திட்டங்கள் மற்றும் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக, மன்றத்தின் தலைவர் Dr. சாந்தகுமார் தனது உரையில் விளக்கினார். ஈகை அமைப்பை கனடாவில் தொண்டு அறக்கட்டளையாக பதிவு செய்யும் முயற்சியில் தற்போது முன்னேறி வருகிறதென்றும் அவர் அறிவித்தார்.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி கல்வி மேம்பாட்டு அறக்கட்டளைத் தலைவர் Dr. சத்தியமூர்த்தி அந்நிறுவனத்தின் செயற்பாடுகளையும், தேவைகளையும் விளக்கியதுடன் தற்போதையநாட்டு நிலைமையும் எடுத்துரைத்தார். உறுப்பினர்கள் அஸ்வின் வடிவேலு மற்றும் ஆரபி மோகனாதாஸ் ஆகியோரர் நிறுவனத்தின் நோக்கத்தை சிறப்பிக்கும் விளக்கக்காட்சியை வழங்கினார்கள்.

நிகழ்வில் டாக்டர்சத்தியமூர்த்தி மற்றும் ஈகை அறக்கட்டளைக்கு $5000 ற்கும் மேல்நன்கொடை அளித்த ஏழுபிரமுகர்களையும் கௌரவித்து கேடயங்கள் வழங்கப்பட்டன. வரவேற்புநடனமும், மெல்லிசையும் நிகழ்விற்கு மேலும் மெருகூட்டின.

ஈகை அறக்கட்டளையின் தரைபங்காளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளிநொச்சி கல்வி மேம்பாட்டு அறக்கட்டளை (KEDT> www.kedt.lk) மற்றும் பல்மேரா இயக்கத்தின் (SLCDF/Palmera> www.palmera.org) இலக்குகள் மற்றும் பண ஒதுக்கீடு பற்றிய விபரங்களும் கலந்துரையாடப்பட்டன.

ஈகை, KEDT உடன் இணைந்து கோணாவில் மற்றும் ஓட்டுப்புலம் கிராமங்களின் கல்விமேம்பாட்டிற்கு தேவையான முயற்சிகளில் ஈடுபடும். கிளிநொச்சியில் இருந்து 16 கி.மீதொலைவில் அமைந்துள்ள இக்கிராமங்களில் 1652 குடும்பங்கள் உள்ளன.

ஈகை அமைப்பானது, Palmera உடன் இணைந்து பெரியகுளம், சம்புகுளம் கிராமங்களில் வாழும் 400 குடும்பங்களின் வாழ்வுமுன்னேற்ற அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடும்.

KEDT> Palmera இயக்கங்களின் மேலதிகவிபரங்களை அறிய இணையத்தளங்களைப் (www.kedt.lk & www.palmera.org) பார்வையிடவும்.

தலைமை மற்றும் திட்டமேலாண்மை, நிகழ்வு ஒருங்கிணைப்பு, நிதிதிரட்டல், தகவல் தொழில்நுட்பம், பொதுஆட்சேர்ப்பு ஆகிய துறைகளில்தேர்வுபெற்ற தொண்டர்களின் உதவி ஈகைநிறுவனத்திற்குத் தேவை. சேவை மனப்பாங்குள்ளவர்கள் இணையத் தளத்தின் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

# முன்னாள் யாழ்ப்பாண மருத்துவ பீட பட்டதாரிகளின் கனடா அமைப்பு, கனடிய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய அன்பளிப்பு









கனடாவில் இயங்கும் முன்னாள் யாழ்ப்பாண மருத்துவ பீட பட்டதாரிகளின் அமைப்பு இங்கு பல ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிவருகின்றது. இந்த அமைப்பில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் கற்று மருத்துவர்களாக வெளியேறியவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். இந்த மருத்துவர்கள் அனைவரும் கனடாவில் பல நகரங்களில் பணியாற்றுகின்றார்கள்.

இந்த அமைப்பு தாயகத்திலும் கனடாவிலும் இயங்கும் பல வைத்தியசாலைகள் மற்றும் சேவை அமைப்புகள் ஆகியவற்றுக்கும் பல வழிகளில் தங்கள் ஆதரவை வழங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது. தற்போது கொரோனா நோயின் கொடுமையினால் எமக்கு பல்வேறு மருத்துவ பாதுகாப்பு கவசங்கள் தேவைப்படுவதை உணர்ந்து, 1700 முகக் கவசங்களை (மாஸ்க்ஸ்) கனடாவின் மார்க்கம் நகரிலி இயங்கிவரும் Participation House: என்னும் சேவை அமைப்பிற்கு வழங்கியுள்ளது. இங்கே காணப்படும் படங்களில், வைத்தியப் பெருந்தகைகள் மயிலாசன் மற்றும் வரதராஜா ஆகியோர் மேற்படி முகக் கவசங்களை Participation House: அமைப்பின் நிர்வாகிகளிடம் வழங்குவதைக் காணலாம்.

*(படங்கள் :- சத்தியன்)*

பயணத் தொடர்... பகுதி-27

# பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

(முனைவர் வே, சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)

அக்டோபர் 7ம் தேதி மதியம் ஒரு நிகழ்வும், மாலை ஒரு நிகழ்வுமாக இரண்டு நிகழ்வுகள். மதியம் கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தின் (தாய் மன்றம்) நவராத்திரி



விழாவின் நிறைவு நாளன்று நவராத்திரியின் பெருமை குறித்து நிறைவுரை நிகழ்த்தினேன். சில நாட்களுக்கு முன்னரும் இங்கு நான் உரையாற்றி இருந்தேன். மீண்டும் உரையாற்ற வேண்டும் என மன்றத்தின் "சக்திகள்" பலர் விடுத்த வேண்டு கோளுக்கு இணங்கவே இந்த நிறைவுரை மதிய நிகழ்வாக அமைந்தது.

மாலை 6 மணிக்கு டொரண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கான நிதி திரட்டுவது தொடர்பாக ஊடகவியலாளர்களின் சந்திப்பு ஸ்காபுறோ நகரில் நடைபெற்றது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பில் நான் நண்பர் லோகேந்திரலிங்கத்துடன் கலந்து கொண்டேன்.

உலகில் உள்ள 7 செம்மொழிகளில் முக்கியமானதாக விளங்கும் தமிழ் மொழிக்கு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், தமிழர்கள் அதிகம் வசிக்கும் கனடாவில் உள்ள டொரண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கப்படும் என முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது. சென்ற ஆண்டு ஸ்கார்பரோ வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில், பல்கலைக்கழகத்தின் முதல்வர் ப்'ரூஸ் கிட், இதற்கான அறிவிப்பை முறைப்படி வெளியிட்டார். தமிழ் இருக்கை முதன்முதலாக அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் 1929ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தகுந்த பேராசிரியர் ஒருவரை தமிழ் இருக்கைக்கு நியமிப்பதற்கு பெரும் தேடுதல் நடந்தது. இறுதியில் விபுலாநந்த அடிகள்தான் இதற்கு உகந்தவர் எனத் தீர்மானித்து அவரை நியமித்தார்கள். முதலாவது தமிழ் இருக்கை பேராசிரியர் ஓர் ஈழத்தவர் என்பது பெருமைக்குரியது.

கனடா நாட்டில் மொத்தம் 96 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் முதல் இடத்தில் இருப்பது 192 வருடம் பழமை வாய்ந்த டொரண்டோ பல்கலைக்கழகம். கனடா நாட்டின் முதல் தரமான கல்வி நிறுவனமான இது, கனடா நாட்டுக்கு மூன்று ஆளுநர்கள், நான்கு பிரதமர்கள், 14 உச்ச நீதிமன்ற நீதிபதிகள், நோபல் பரிசு வென்ற பத்து சாதனையாளர்கள், 'ரூறிங் பரிசு வென்ற மூன்று சாதனையாளர்கள், ரோட் பரிசு வென்ற 94 சாதனையாளர்களைத் தந்திருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகம் முதன் முறையாக 21 ஜனவரி 2019 மாலை அன்று தமிழ் மரபுத் தினத்தை கொண்டாடியது. உலகிலேயே ஒரு பல்கலைக்கழகம் தமிழ் மரபு தினத்துக்கு விழா எடுத்தது இதுவே முதல் முறை என்று சொல்லலாம்.

இத்தனை சிறப்புமிக்க டொரண்டோ பல்கலைக்கழகம் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணியில் உலகுக்கு வழிகாட்டும் பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. டொரண்டோவில் நிறுவப்படும் இந்தத் தமிழ் இருக்கை, இந்தியத் துணைக்கண்டத்தைத் தாண்டிய தமிழ்க் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு மையப்புள்ளியாகவும் கலங்கரை விளக்கமாகவும் அமையும். இது உலகத் தரத்தில் தமிழுக்கான அங்கீகாரத்தை அளிப்பதோடு, தொடர் பயன்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் வலு சேர்த்து எதிர்காலத் தமிழ்ச் சந்ததிக்கு நன்மை பயக்கும். அதில் தமிழ் இருக்கையை நிறுவிட மூன்று மில்லியன் கனடிய டாலர்களை இரண்டு ஆண்டுகளுக்குள் நன்கொடையாகத் திரட்டி முழுமையாகக் கையளிக்க வேண்டும்.



ஆனால் நிதி இலக்கு பாதி அளவை மட்டுமே எட்டியிருக்கிறது.

டொரண்டோ பல்கலை கழகத்தில் இருக்கை அமைவதற்கான நிதியைத் திரட்ட கனடா வாழ் தமிழ்ச் சமூகம் பல்வேறு அதிகாரபூர்வ நிகழ்வுகளை முன்னெடுத்து வருகிறது. நிதி சேகரிப்பில் உலகளவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குழுவிற்கு ஆதரவு வழங்கும் முகமாக பல தனி மனிதர்களும் குழுக்களும் அமைப்புக்களும் தீவிரமாக செயற்பட்டு வரும் இவ்வேளையில், பலர் இந்த நற்காரியத்திற்கு தங்கள் ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர். கடந்த ஜூன் மாதம் நடந்த விழாவில் பல்கலைக்கழகத்தின் பு'ரூஸ் கிட் பேசும்போது "ஒரே இரவில், இரண்டே மணி நேரத்தில் 7,00,000 கனடிய டாலர்கள் நிதியாகத் திரண்டது கனடிய வரலாற்றில் மட்டுமல்ல் பல்கலைக்கழகத்தின் வரலாற்றிலும் இதுவே முதல் முறை. மொழியைக் காக்கவும் வளர்க்கவும் தரப்படும் நன்கொடையே அனைத்திலும் சிறந்தது. அதைத் தமிழ் மக்கள் செய்திருக்கிறார்கள்" என, பலத்த கைதட்டல்களுக்கு இடையே தெரிவித்தார். அந்த விழாவில் கலந்து கொண்ட தமிழ் மக்கள், வரிசையில் நின்று நன்கொடை வழங்கிய காட்சி மொழியே தங்களின் அடையாளம் என்பதை அவர்கள் இழக்க விரும்பவில்லை என்பதைக் காட்டியது.

அந்த தமிழ் இருக்கை நிதி சேகரிப்பு தொடர்பான ஊடகவியாலாளர்கள் சந்திப்பில் தான் அன்று மாலை நான் கலந்து கொண்டேன். " ஒருத்தி" என்னும் தமிழ்த் திரைப்படத்தை தயாரித்து உலகின் பலநாடுகளிலும் திரையிட்ட பிளஸ் சினி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பி. எஸ். சுதாகரனின் ஏற்பாட்டில் மேற்படி தமிழ் இருக்கை நிறுவுவதற்கான நிதி சேர்க்கும் முயற்சியாக "ஒருத்தி" திரைப்படத்தை 19ம் திகதி பிற்பகல் 4.00 மணிக்காட்சியாக றிச்மண்ட்ஹில் நகரில் உள்ள யோர்க் சினிமாவில் திரையிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதில் பிளஸ் சினி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பி. எஸ். சுதாகரன் மற்றும் டொரண்டோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவுவதற்கான நிதி சேகரிப்பில் உலகளவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குழுவின் சார்பாக திரு. சிவன் இளங்கோவும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்கள். நானும் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக அவர்களிடம் உறுதி அளித்தேன்.

டொரண்டோ தமிழ் இருக்கைக்காக அளிக்கப்படும் அனைத்து நன்கொடை விவரங்களும் அப்பல்கலைக்கழகத்தில் நிரந்தரமாகப் பொறிக்கப்படும். இந்த முன்னெடுப்புக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் றறற.வழசழடெ-வழவயஅடைஉாயசை.உய என்ற இணையதளத்துக்குச் சென்று னுழயேவந என்ற பொத்தானை அழுத்தி நன்கொடையை வழங்கலாம். அனைத்து நன்கொடைகளும் அறநல வரி பற்றுச்சீட்டு (உாயசவையடிடந வயஒ சந-உநிவ) வழங்கி ஏற்கப்படும். இனிய தமிழ் இருக்கை அமைய இயன்றதை நாமும் வழங்கலாமே!

*(வளரும்)*

# அன்பின் தொனி - 560

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**
**அன்பான சகோதர, சகோதரீகளே!**

இன்றய நாறிலும் கொறோனா வைறஸ் (ஊழசழயெ ஏசைரள) நோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்காகவும், அவர்களைப் பாதுகாக்கவும், வைத்திய உதவி செய்வதற்காகவும் முன்னிலையில் நின்று சேவை செய்யும் வைத்தியர்கள், தாதிமார்கள், உடன் உதவியாளர்கள் மற்றும் வைத்திய சாலையில் வேலை செய்யும் ஊழியர் யாவருக்காகவும் அவர்கள் பாதுகாப்புக்காகவும் ஜெபிப்போம்.

**ஜெபம்:**

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினா யிரம்பேரும் விழுந்தா லும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடார த்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களு க்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார் கள். சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய். அவன் என்னிடத்தில் வாஞ்சை யாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.- சங்கீதம் **91: 1-16**

கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், நான் சிறுமையும் எளிமை யுமானவன். என் ஆத்துமாவைக் காத்தருளும், நான் பத்தியுள்ளவன், என் தேவனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும். ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும், ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பி டுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவி கொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும். நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடு வேன், நீர் என்னைக் கேட்டருளுவீர். ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை. ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாக பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர் நீர் ஒருவரே தேவன். கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன், நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒரு முகப்படுத்தும். என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன். நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது, என் ஆத்துமாவைத்தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர். தேவனே, அகங்காரிகள் எனக்கு விரோத மாய் எழும்புகிறார்கள், கொடுமைக்காரராகிய கூட்டத்தார் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள், உம்மைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்காதிருக்கிறார்கள். ஆனாலும் ஆண்டவரே நீர் மனவுருக் கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன். என் மேல் நோக்க மாகி, எனக்கு இரங்கும், உமது வல்லமையை உமது அடியானுக்கு அருளி, உமது அடியாளின் குமா ரனை இரட்சியும். கர்த்தாவே, நீர் எனக்குத் துணைசெய்து என்னைத் தேற்றுகிறதை என்பகை ஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு, எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும்.- சங்கீ **86: 1-17**

**மேலதிக ஜெப தேவைகளுக்கு தொடர்பு: (647) 271-7645**

**தொடரும்...**

# Canada VISA

கூடிய விரைவில் உங்கள் கைகளில்

## இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள் CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்

**STUDENT VISA**

ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.

**TOURIST VISA**

தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**VISIT VISA**

பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**REFUSED VISA**

உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**BUSINESS VISA**

உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**10 வருட கால நம்பிக்கையான சேவை**



P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com
Hotline: +94 777-761 346



P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026



# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

RE/MAX






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

தமிழ் பேசும் இளம் சட்டத்தரணியான
அரவிந் ஜெகதீசன் அவர்களை
அழைப்பதன் மூலம் உங்கள்
வழக்குகள், தொழில் சம்பந்தமான பிரச்சனைகள்,
வீட்டு உரிமையாளர்கள் - குடியிருப்பாளருக்கு
இடையிலான வழக்குகள் ஆகியவை தொடர்பான
ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
437.229.9643
• Employment Law • Wrongful Dismissal
• Severance Packages • Human Rights
• Landlord and Tenant Law • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
email: aro@aravinthlaw.ca www.aravinthlaw.ca
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3C1

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today
Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1257 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 8, 2020

# கனடாவில் அத்தியாவசிய சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்க, எமது அரசு மாகாணங்களுடனும், இணைந்து செயற்படுகின்றது

## - கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று அறிவிப்பு



கனடாவில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதன் மூலம் எமது குடும்பங்கள் தொடர்ந்து பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதை மேற்படி பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உறுதி செய்கிறார்கள். கனேடியர்கள், முன்னரை விடவும் இவர்களில் அதிகம் தங்கியிருப்பதால், அவர்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்குக் கனேடிய அரசு மாகாணங்களுடனும், பிராந்தியங்களுடனும் சேர்ந்து செயற்படுகிறது.

வீடுகளில் இருக்குமாறு பெருமளவு கனேடியர்கள் கோரப்படும் அதேவேளை, ஒவ்வொரு நாளும் வேலைக்குச் சமூகமளிக்குமாறு பல மில்லியன் கனேடியர்கள் கோரப்படுகிறார்கள். இவர்கள் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதன் மூலம் எமது குடும்பங்கள் தொடர்ந்து பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதை உறுதி செய்கிறார்கள். கனேடியர்கள், முன்னரை விடவும் இவர்களில் அதிகம் தங்கியிருப்பதால், அவர்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்குக் கனேடிய அரசு மாகாணங்களுடனும், பிராந்தியங்களுடனும் சேர்ந்து செயற்படுகிறது.

தமது அத்தியாவசிய பணியாளர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கான செலவைப் பகிர்ந்து கொள்வதற்கான திட்டங்களை அனைத்து மாகாணங்களும், பிராந்தியங்களும் உறுதி செய்துவிட்டன, அல்லது அதை உறுதி செய்யும் நடைமுறை மேற்கொள்கின்றனவெனப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ அறிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் அத்தியாவசிய பணியாளர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு உதவியாகக் கனேடிய அரசு 3 பில்லியன் டொலர் வரையான பணத்தை வழங்கும். எந்தப் பணியாளர்கள் உதவிக்குத் தகுதி பெறுவார்களெனவும், அவர்களுக்கு எவ்வளவு உதவி வழங்கப்படுமெனவும் மாகாணங்களும், பிராந்தியங்களும் முடிவு செய்யவுள்ளன.

நிச்சயமற்ற தற்போதைய காலகட்டத்தில், கனேடியர்களுக்கும், கனேடிய வணிக நிறுவனங்களுக்கும் உதவியளிக்கும் விரிவான பொருளாதாரத் திட்டத்தின் அங்கமாக இந்த நடவடிக்கைகள் அமைகின்றன. மாறிவரும் நிலைமையைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து, உடல்நலம், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்கும், பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து மேலதிக நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்.

மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்:
டொறீன் சவுந்தரநாயகம்
Gary.Anandasangaree.C1A@parl.gc.ca

# ஏற்கெனவே உள்ள பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றினால் வர்த்தக நிறுவனங்களை திறக்க அனுமதி வழங்கப்படும் என்கிறார் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்



ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்ட முறையான பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுமிடத்து, ஒன்றாறியோ அரசானது சில்லறை வர்த்தக நிறுவனங்களை மீளவும் திறக்க அனுமதி வழங்கப்படும் என ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் அறிவித்துள்ளார். ரொரன்ரோ மாநகரில் உள்ள “குயின்ஸ்பார்க்” என்னும் மாகாணப் பாராளுமன்றத்தில் தனது அமைச்சர்கள் சகிதம் ஊடகவியலாளர்களை இணைய வழி மூலமாகச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முதல்வர் அறிவித்த இவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

மே 8ஆம் திகதி நள்ளிரவு 12:01 மணிக்குப் பின்னராக தோட்டப் பொருட்கள் மற்றும் நாற்றுப் பண்ணை விற்பனை நிலையங்களில் வாடிக்கையாளர்கள் உள்ளே சென்று தமக்கு வேண்டிய பொருட்களை நுகரவும் அவற்றுக்கான கட்டணங்களைச் செலுத்தவும் அனுமதிக்கப்படுவர்.

மே 9ஆம் திகதி நள்ளிரவு 12:01 மணிக்குப் பின்னராக, கட்டடப்பொருட்கள், உபகரணப் பொருட்கள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பொருட்கள் வினியோகிக்கும் வணிக நிலையங்கள் அவைகளின் வாடிக்கையாளர்களை கடைகளுக்குள் அனுமதிக்கவும் கொள்வனவுகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படும்.

மே 11ஆம் திகதி நள்ளிரவு 12:01 மணி முதல், சாலையுடன்கூடிய நுழைவாயிலை அல்லது தனியான நுழைவாயிலை உடைய சில்லறை வணிக நிலையங்கள் அவைகளின் கடைகளுக்கு வெளியே மட்டும் வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்த பொருட்களைப் பெற அல்லது கொடுக்க அனுமதி வழங்கப்படும்.

அத்துடன், அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் மற்றும் தொடர்மாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை மீளத் தொடங்க அரசாங்கம் அனுமதி வழங்குகிறது.

***விஜய் தணிகாசலம், ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர்.***
***ஸ்காபரோ - றூஜ் பார்க்***

Life Insurance
Don’t think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LiFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay)
Thavayogarajah
Insurance and
Investments
Call Ajay:
416.704.8074